**வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் பகுதி 02 - 2023**

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு II, பீ.3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. யாழ்ப்பாணம், முல்லைதீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மாத்தளை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும், சிறுநிலவுடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்கதும் சந்தைவாய்ப்புள்ளதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவை முன்னேற்றி வர்த்தகமயமாக்கலை நோக்கி நகர்வதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் செயல்பாடுகள் விவசாயிகள் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, நவீன விவசாய தொழில்நுட்ப செயல்விளக்க பூங்காக்கள் (ATDP) , உற்பத்தி மற்றும் சந்தை உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. நிதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா.26,059.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 86.865 மில்லியன் ஆகும் மற்றும் ரூபா.18,388.5 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 61.295 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும் ரூபா. 7,494 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 25 மில்லியன் கண்டி, பதுள்ள, அம்பாறை, கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற ஏனைய மாவட்டங்களில் நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு ஐரோப்பிய ஆணைக்குழு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்து பெறப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா. 177 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 0.6 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த செயற்திட்டம் அதன் செயல்பாடுகளை 2017 சனவரி 01 அன்று ஆரம்பித்து 2021 திசெம்பர் 31 இற்குள் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டது. இருப்பினும், திட்டத்தின் செயல்பாடுகள் நிறைவடையும் திகதி 2024 திசெம்பர் 31 வரைக்கும் நீடிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடு / கணக்காய்வ விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உலக வங்கி / ஐடிஏவின் கடன் மீதி ஐ.அ.டொலர் 49.7 மில்லியனும் ஐரோப்பிய ஒன்றிய மானியத்தின் மீதி ஐ.அ.டொலர் 12.44 மில்லியனும் மத்திய வங்கியின் நாணயமாற்று விகிதமான ரூபா. 323.92 இனை பயன்படுத்தி இலங்கை ரூபா பெறுமதியாக மாற்றப்படும். ஆனால் மாற்றத்திற்கு ரூபா. 330.54 நாணயமாற்று விகிதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள நாணயமாற்று வேறுபாடு ரூபா.262.65 மில்லியனால் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. | 262.65 | 2024 திசெம்பர் 31, இல் உள்ளவாறான நாணயமாற்று விகிதத்தைப் பயன்படுத்தி கடன் / மானியத்தின் ஐ.அ.டொலர் இன் பெறுமதி இலங்கை ரூபா பெறுமதியாக ஆக மாற்றப்பட்டது, மற்றும் முந்தைய ஆண்டிலும் அதே நடைமுறை பின்பற்றப்பட்டது. இருப்பினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களானது 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சரியான நாணயமாற்று விகிதத்தைப் பயன்படுத்தி நாணயமாற்று வேறுபாட்டினை துல்லியமாகக் கணக்கிடுதல் வேண்டும். |
| (ஆ) | யூரோ நிதியிலிருந்து ரூபா.99.13 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாண அலுவலகங்களால் உலக வங்கியின் நிதியிலிருந்து செலவுகள் செய்யபபட்டிருந்தன. | 99.13 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 2024 ஆம் ஆண்டின் போது சீர் செய்யப்பட்டது. | நிதி ஒப்பந்த செயல்முறையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | உலக வங்கியின் நிதியம் மற்றும் யூரோ மானிய நிதியத்திற்கான வங்கியில் உள்ள காசு மீதியாக ரூபா.592.40 மில்லியன் மற்றும் ரூபா.46.72 மில்லியன் மீதியானது 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது ஆனால் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தொடர்புடைய வங்கிகூற்று மீதிகள் முறையே ரூபா. 695.93 மில்லியன் மற்றும் ரூபா.84.28 மில்லியனாக காணப்பட்டன. எனவே, | 141.09 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. வங்கி இணக்க கூற்றினை தயாரிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்திற்கு முக்கியமாக நிதி முகாமைத்துவ ஊழியர்கள் இல்லாமையே காரணமாகும். | வேறுபாடுகளை அடையாளம் காண்பதற்கு வங்கி இணக்க கூற்றினை சரியான நேரத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |

காசுப் புத்தக மீதிகளுக்கும் மற்றும் வங்கிகூற்று மீதிகளுக்கும் இடையிலான வித்தியாசம் ரூபா. 141.09 மில்லியனாக காணப்பட்டது. செயற்திட்டம் மூலம் வங்கி இணக்க கூற்று தயார் செய்யப்பட்டிருக்காமையினால் கணக்காய்வின் போது வேறுபாடு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழு (PSC) கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் நான்கு PSC கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தன. | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அந்தக் கூட்டத்தினை நடாத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டன. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்திட்ட வழிநடாத்தல் குழு கூட்டம் நடாத்தப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த செயற்திட்டம் 2017 சனவரி 17 அன்று தொடங்கப்பட்டு 80 சதவீத இலக்கினை2023 திசெம்பர் 31 அன்று நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டது ஆனால் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றத்தில் 75 சதவீதம் மட்டுமே 2023 திசெம்பர் 31 அன்று இருப்பதாக அறிக்கையிடப்பட்டது. | செயற்திட்ட காலத்தில் ஏற்பட்ட வெளிப்புற காரணிகளான கோவிட் தொற்றுநோய், பொருளாதார மந்த நிலை மற்றும் நெருக்கடி ஆகியவை செயற்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. | திட்டமிட்டதன் பிரகாரம் செயற்திட்ட முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனையா பகுதியில் உள்ள அம்புல் வாழை திட்டத்திற்காக ரூபா. 44,585,198 மதிப்பீட்டில் 18 விவசாய கிணறுகள் கட்டுவதற்கான ஒப்பந்தம் 2022 பெப்ரவரி 07 அன்று தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் கிணறுகளின் நிர்மாணப்புக்கள் 2022 ஏப்ரல் 07 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்படல் | 18 விவசாய கிணறுகளில் 16 விவசாய கிணறுகள் ஒப்பந்ததாரரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த 2 கிணறுகளின் சுவர்கள் இடிந்து விழுந்ததால் அந்த கிணறுகள் இடிந்து விழுந்தன. | செயற்திட்டத்தின் செயல்பாடுகள் திட்டமிட்டதன் பிரகாரம் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். 2024 ஏப்ரல் 08 இல் உள்ளவாறு 7 கிணறுகளின் நிர்மாணம் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் 2 கிணறுகளின் நிர்மாணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விவசாய கிணறுகள் கட்டுவதற்கான கால நீடிப்பு 2023 சனவரி 06 ஆம் திகதிக்கு பின்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மத்திய மாகாண செயற்திட்ட உப அலுவலகத்தின் நிர்மாணம் தொடர்பான பெறுகை கோவைகளின் பலவீனங்கள் காரணமாக ஒப்பந்ததாரர்களின் தகவல்கள், ஒப்பந்தத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கான முன்பணப் பிணைப் பத்திரங்களிலிருந்தான அறவீடு, ஒப்பந்தம் ஆரம்பிக்கும் திகதி, செயற்திட்டம் நிறைவடைந்த திகதி, பிடிகாசு மற்றும் பணக் கொடுப்பனவு போன்றவற்றை சரியாக அடையாளம் காண முடியவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தற்போது போது சரி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறைபாடுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் சேவை ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. | ஆவணங்களை முறையாகப் பேணுதல் வேண்டும். |
| (இ) | கொனாவெவ சந்தையினை அணுகுவதற்கான வீதியின் நிர்மாணத்திற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) தரம் C-6 அல்லது அதற்கு மேற்பட்ட விலைமனுதாரர்களின் தகைமைகளை குறிப்பாகக் கோரியிருந்த போதிலும் C-7 தர விலைமனுதாரருக்குத் ரூபா. 11.10 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மேலும், 2023 செப்தெம்பர் 13 அன்று வேலையினை ஆரம்பிப்பதற்காக ரூபா. 2.2 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட்டது மற்றும் வேலையானது 2024 ஒக்தோபர் 28 வரையிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டதுடன் மேலும் இந்த பிரச்சினைக்கு பொறுப்பான மாகாண பொறியியளாளரின் சேவை ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண பணிகளுக்கு பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வேவெல்லாவ குளப் பகுதியில் 14 குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை 2023 ஏப்ரல் 24 அன்று ரூபா. 14 மில்லியன் மதிப்பீட்டில் மத்திய மாகாண செயற்திட்ட உப அலுவலகம் வழங்கியது. நிர்மாணப் பணிகள் 2023 செப்தெம்பர் 24 அன்று நிறைவு செய்யப்படவிருந்த போதிலும், நிர்மாணப் பணிகள் 2023 திசெம்பர் மாதத்திற்குள் | 14 குழாய் கிணறுகளின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன மற்றும் விவசாயிகள் தங்கள் பயிர்செய்கைக்கு இந்த வசதியைப் பயன்படுத்துகின்றனர். | நிர்மாணப் பணிகள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை, மேலும் 2 குழாய் கிணறுகளின் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | ஊவா மாகாணத்தின் புத்தளவில் உள்ள வகுருவெல பகுதியில் உள்ள கொடித்தோடை பழ பயிர்செய்கை செயற்திட்டத்தில் 34 விவசாயிகளின் பயன்பாட்டிற்காக ரூபா. 34 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2019 யூன் 17 அன்று ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அணைக்கட்டின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்கள் நிறைவேற்றப்படாமையினால் கொடித்தோடை பயிர்செய்கை செயற்திட்டம் தோல்வியடைந்துள்ளது. | வகுருவெல அணைக்கட்டின் நிர்மாண பணிகள் 2024 இல் நிறைவடைந்துள்ளன மற்றும் இதன் மூலம் விவசாயிகள் பயனடைகின்றனர். | திட்டமிட்டதன் பிரகாரம் விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்ளல் வேண்டும். |

### 3.3 கள விஜயத்தில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாவட்டத்தின் ஹசலக பகுதியில் விவசாயிகளின் முன் ஆய்வு இல்லாமல் 400 அலுமினிய ஏணிகள், வாழைப்பழத் தொட்டிகளுக்கான பொலித்தீன் உறைகள் மற்றும் வாழை நடவுப் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்த உபகரணங்கள் ஹசலக பகுதியில் ஆண்டுதோறும் ரூபா. 360,000 வாடகைக்கு எடுக்கப்பட்ட வீட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் களஞ்சியசாலையின் பாதுகாப்பிற்காக ஒரு தனியார் கம்பனியுடன் ஆண்டுக்கு ரூபா. 936,000 செலுத்துவதற்கான ஒப்பந்தமொன்றும் செய்யப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா. 1,296,000 தொகை பொருளாதாரமற்றதாக இருந்தது என்று அவதானிக்கப்பட்டது. | பயன்பெறும் விவசாயிகளின் நிலங்கள் பயிர்செய்கைக்குத் தயாராகும் வரையிலும் அந்த உள்ளீடுகள் வழங்கப்படுவதில்லை. எனவே, அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் களஞ்சியப்படுத்தப்படுத்தி வைப்பது அவசியமாகும். | நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு நிதிகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.4 பயன்படுத்தப்படாத / குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட ஒப்பந்தம் 2017 சனவரி 17 அன்று கைச்சாத்திடப்பட்டது மற்றும் 2021 திசெம்பர் 31 க்குள் நிறைவு செய்யப்படும். எவ்வாறாயினும், உலக வங்கி / ஐடிஏ செயற்திட்ட காலப்பகுதியினை 2024 திசெம்பர் 31 வரையிலும் நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.<br>2023 திசெம்பர் 31 இல் உள்ளவவறான நிதி பயன்பாட்டின் செயல் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டபோது, ஐடிஏ கடனில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியான ஐ.அ.டொலர் 61.295 மில்லியனில் இருந்து செயற்திட்டம் ஐ.அ.டொலர் 44.677 மில்லியனை மட்டுமே பயன்படுத்தியுள்ளது என்று அவதானிக்கப்பட்டது. சதவீதமாக பார்க்கையில் இது 72.8 சதவீதமாகும். எனவே, மீதமுள்ள ஒரு வருட காலத்தை மீதியாகவள்ள நிதியுடன் கருத்தில் கொள்ளும்போது நிதியின் பயன்பாடு விளைதிறனற்றதாகவே இருந்தது என்று அவதானிக்கப்பட்டது. | இந்தத் செயற்திட்டம் ஆரம்பத்தில் 2021 திசெம்பர் 31 க்குள் நிறைவு செய்ய வேண்டியிருந்தது மற்றும் செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் நிறைவு செய்யும் காலம் 2024 திசெம்பர் 31 வரைக்கும் நீடிக்கப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | நிதிகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரியின் செயலாளருக்கும் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கும் இடையே மே 17, 2021 அன்று கைச்சாத்தான TFOB5383 ஆம் இலக்க மானிய ஒப்பந்தத்தின் பிரகாரம், ஐரோப்பிய ஆணைக்குழு ஐ.அ.டொலர் 24.95 மில்லியன் மானியத்தை வழங்க ஏற்றுக்கொண்டுள்ளது , மீளாய்வாண்டின் இறுதியில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் மானியத்தின் ஒட்டுமொத்த பயன்பாடு ஐ.அ.டொலர் 10.507 மில்லியன் மட்டுமே ஆகும் மற்றும் இது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையில் 42.12 சதவீதத்திற்கு சமனாகும். எனவே, அடுத்த ஆண்டில் மீதமுள்ள 57.88 சதவீதமான ஐரோப்பிய ஒன்றிய மானிய நிதியின் பயன்பாடு நிச்சயமற்றது. | இந்தத் செயற்திட்டம் ஆரம்பத்தில் 2021 திசெம்பர் 31 க்குள் நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தது மற்றும் செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் நிறைவு செய்யும் காலம் 2024 திசெம்பர் 31 வரைக்கும் நீடிக்கப்பட்டது என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்படுவதுடன் நிதிகள் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் மீள செலுத்தக்கூடிய் வெளிநாட்டுக் கடனுக்கான ஒதுக்கீடான ரூபா.4,765 மில்லியன் தொகையில் இருந்து ரூபா.3,742 மில்லியன் தொகையினை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியுள்ளது என்று | ஏற்றுக்கொள்ளுகின்றோம்.<br><br>பாதீட்டின் ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்த நாங்கள் திட்டமிட்டிருந்த போதிலும் பொருட்களை | நிதிகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. எனவே, மொத்த ஒதுக்கீட்டில் 21 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா.1,023 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரியான நேரத்தில் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட காலதாமதத்தால் அது சாத்தியமற்றதாகவிருந்தது. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஐரோப்பிய ஆணைக்குழு மானியத்தின் பாதீட்டு பங்களிப்பு ரூபா. 3,000 மில்லியன் ஆகும். இந்த செயற்திட்டம் ஐரோப்பிய ஒன்றிய மானியத்தில் ரூபா.1,476 மில்லியனை மாத்திரம் பயன்படுத்தியுள்ளது மற்றும் இது ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகையில் 49 சதவீதத்திற்கு சமனாகும். எனவே, இந்த ஆண்டில் 51 சதவீதம் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.<br><br>பாதீட்டின் ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்த நாங்கள் திட்டமிட்டிருந்த போதிலும் பொருட்களை சரியான நேரத்தில் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட காலதாமதத்தால் அது சாத்தியமற்றதாகவிருந்தது | முறையாகத் திட்டமிடப்படுவதுடன் நிதிகள் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | 2023 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தால் சேகரிக்கப்பட்ட 433 எண்ணிக்கையான பெறுகைகளுக்கான மீள வழங்கப்படாத விலைமனுக்கான வைப்புத் தொகை ரூபா. 6,847,500 தொகை 2024 திசெம்பர் 24 அன்று அமைச்சுக்கு மாற்றப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டது. எனவே, நிதிக்கூற்றில் கடன் மீதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வங்கிக் கணக்கில் ஒரு வருடத்திற்கும் மேலாக ரூபா.6,847,500 தொகை செயலற்ற நிலையில் காணப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது. | மீள வழங்கப்படாத விலைமனுக்கான வைப்புத் தொகை கமத்தொழில் கால்நடை வளங்கல் காணி மற்றும் நீர்ப்பாசண அமைச்சுக்கு திருப்பிச் செலுத்தப்பட்டது. | மீள வழங்கப்படாத வைப்புத்தொகையை உரிய நேரத்தில் மாற்றம் செய்தல் வேண்டும். |
| (ஊ) | கணக்காய்வுக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான விவசாயிகளுக்கான உர விநியோகம் உலக வங்கியின் கோரிக்கையின் பேரில் செயல்படுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து 25 சதவீத பங்களிப்பு தொகை சேகரிக்கப்படும். சேகரிக்கப்பட்ட 25 சதவீத பங்களிப்பு தொகையான ரூபா.67 மில்லியன் 2024 திசெம்பர் 24 அன்று திறைசேரிக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.<br>இந்த தொகை நிதிக்கூற்றில் செலுத்த வேண்டிய ஏனைய செண்மதி உருப்படியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஒரு வருடத்திற்கும் மேலாக வங்கிக் கணக்கில் ரூபா.67 மில்லியன் தொகை பயன்பாடற்ற நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>பயனாளிகளின் பங்களிப்புகளை திரண்ட நிதிக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதி சரியான நேரத்தில் மாற்றம் செய்யப்படல் வேண்டும் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஊவா மாகாண செயற்திட்ட உப அலுவலகத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 32,224,000 பெறுமதியுள்ள 380 பொலித்தீன் தழைக்கூளம் (polythene mulch) ரோல்கள் பெல்வெஹெரவில் உள்ள விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சிய கிடங்கில் 18 மாதங்களுக்கும் மேலாகப் பயன்படுத்தப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | MD-2 வகை அன்னாசி பயிர்செய்கையினை நிறுத்த வேண்டியிருந்ததால் பெறுகை செய்யப்பட்ட பொலிதீன் தழைக்கூளம் முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. | நிதிகளை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாண செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் இருந்தான நிலுவையான ரூபா.1,000,000 கட்டுநிதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது இந்தத் தொகை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் நடைமுறை சொத்தின் கீழ் ஏனைய முற்பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது சீர் செய்யப்பட்டுள்ளது. | கட்டுப்பணத்தினை உடனடியாக வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாண மாவட்டத்தில் கொத்து | உருளைக்கிழங்கு செயற்திட்டம் | |
| (i) | யாழ்ப்பாணப் பகுதியில் செயல்படுத்தப்படவுள்ள உத்தேச கொத்து உருளைக்கிழங்கு செயற்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக ரூபா.13,010,250 மதிப்புள்ள 20 மெட்ரிக் டொன் விதை உருளைக்கிழங்கினை கொள்வனவு போது பார் குறியீடு இல்லாமையினால் உற்பத்தியாளரின் விபரங்கள், உருளைக்கிழங்கு கிழங்கின் நிறை, உற்பத்தி திகதி மற்றும் காலாவதி திகதி முதலியவற்றினை அடையாளம் காண முடியவில்லை. | விதை உருளைக்கிழங்கு சாக்குகளில் பார்கோடுகள் காணப்படவில்லை என்றபோதிலும், உற்பத்தியாளர், நிறை, உற்பத்தி திகதி , காலாவதி திகதி முதலிய தகவல்கள் உருளைக்கிழங்கு சாக்குகளின் லேபல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | உற்பத்தி விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | யாழ்ப்பாணப் பகுதியில் கொத்து உருளைக்கிழங்கு செயதிட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளில் ஜியோட்ரிகம் எனப்படும் பூஞ்சை கண்டுபிடிக்கப்பட்டது என்று விவசாய | முகாமையினால் எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. | நிபுணர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் நிதியினை வினைத்திறனாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையின் ஆரம்பகட்ட ஆய்வுகூட விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, உருளைக்கிழங்கு விதைகளை களங்சியப்படுத்தும் போது அதிக கவனம் செலுத்ததல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும் காற்றோட்டம் குறைவாக உள்ள இடத்தில் விதைகளை சேமித்து, சாக்குகளில் அடைத்து ஒன்றாக சேமித்து வைத்தததன் காரணமாக ஜியோட்ரிகம் பூஞ்சையானதுபரப்பப்பட்டு உருளைக்கிழங்கு விதைகளை அழித்துவிட்டது. | | விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (iii) | யாழ்ப்பாணப் பகுதியில் உருளைக்கிழங்கு கொத்து திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் 28 மிமீ - 55 மிமீ வரை இருக்க வேண்டும் என்றபோதிலும் பரிசோதனை செய்யப்பட்ட விதைகளின் அளவு 70 மிமீ - 80 மிமீ வரை காணப்பட்டன. 25 கிலோ பைகளில் அடைக்கப்பட்ட 830 விதை உருளைக்கிழங்குகள் தனித்தனியாக நிறையிடப்படவில்லை. | இந்த பெறுகைக்கு அங்கீகரிக்கப்பட்ட விவரக்குறிப்புகளின் பிரகாரம், விதையொன்றின் அளவு 28-55 மிமீ வீச்சில் காணப்பட்டிருத்தல் வேண்டும். செயற்திட்டத்தின் தொழில்நுட்பக் குழுவால் 95 சதவீத அளவு அங்கீகரிக்கப்பட்ட வீச்சில் காணப்பட்டன என்றுடி உறுதி செய்யப்பட்டது. | விவரக்குறிப்புகளுக்கு இணங்கும் வகையில் விதை உருளைக்கிழங்குகள் காணப்படல் வேண்டும். |
| (iv) | யாழ்ப்பாண பகுதியில் உள்ள வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் உருளைக்கிழங்கு கொத்து திட்டத்திற்காக விதை உருளைக்கிழங்குகளின் (ரெட் லா சோடா) கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், அகற்றல் செய்தல் மற்றும் ஏனைய செலவுகளுக்காக ரூபா. 14,487,900 செலவிடப்பட்டது. இது உலக வங்கி நிதியத்திலிருந்து கடன் மற்றும் அதற்கான வட்டியினை திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தினால் பெறப்பட்ட கடனுடன் செயல்படுத்தப்படுகின்றது. இந்த செலவினமானது பயனற்றதொரு செலவாகும் என்றும்ம் விதை உருளைக்கிழங்கின் அறுவடையினை பெற்றுக்கொள்வதற்கான நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை என்றும் அவதானிக்கப்பட்டது. | முகாமையினால் எவ்வித கருத்துக்களும் தெரிவிக்கப்படவில்லை. | விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | யாழ்ப்பாண மாகாணத்தில் உருளைக்கிழங்கு கிளஸ்டர் திட்டத்திற்காக 2023 நவம்பர் இல் இறக்குமதி செய்யப்பட்ட 20 மெட்ரிக் டன் ரெட் லா சோடா விதை உருளைக்கிழங்குகள் அழிக்கப்பட்டமை தொடர்பாக 2024 மார்ச் 31 ஆம் திகதியிடப்பட்ட ARI/D/ASMP/Part 02/A/2023/AQ/12 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினா வெளியிடப்பட்டது. அழிக்கப்பட்ட விதைகளுக்குப் பதிலாக வழங்குனரின் செலவில் எதிர் வரவிருக்கும் பருவத்திற்குத் தேவையான அளவு விதைகளை வழங்கல் செய்வதற்கு உடன்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டத் கைத்தொழில்கள் அமைச்சின் செயலாளரிடமிருந்து (2024 ஜூலை 10 ஆம் திகதியிடப்பட்ட ASRI/5/32/MIN/AR/236 ஆம் இலக்க கடிதம்) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்ட கணக்காய்வு ஐயவினாவக்கான பதிலளிப்பில் குறிப்பிடப்பட்டது. ஆனால் உருளைக்கிழங்கு விதைகள் 2024 நவம்பர் வரையிலும் வழங்கல் செய்யப்படவில்லை. | உடன்பட்டுக்கொண்டதன் பிரகாரம் வழங்குனர் தேவையான அளவை வழங்கியுள்ளார் ஆனால் தடுப்புக் காப்புச் சோதனைகளில் சரக்குகள் தோல்வியடைந்திருந்தன. | நட்டங்களை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாத்தளை மாவட்டத்தின் லக்கல பகுதியில் MD-2 அன்னாசி பயிர்செய்கை செயற்திட்டம் தோல்வியடைந்ததன் பின்னர் அன்னாசி பயிர்செய்கைக்கு பதிலாக 200 விவசாயிகளின் பங்களிப்புடன் 100 ஏக்கர் பரப்பளவில் பயிரிடுவதற்கான T.J.C. மா பயிர்செய்கை செயற்திட்டம் ரூபா.125 மில்லியன் மதிப்பீட்டில் 2023 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 100 பயனாளிகள் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். | விவசாய திணைக்களம் மற்றும் மீளாய்வுக் குழுவானத இந்த செயற்திட்டம் குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தன. எனவே, மாற்றுப் பயிருக்கு மாறுவதைத் தவிர எமக்கு வேறு வழி காணப்படவில்லை. | விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி பயிராக மாம்பழ பயிர்ச்செய்கையினை நவீனமயமாக்கும் நோக்கில் தம்புள்ளை பகுதியில் 204 விவசாயிகளின் பங்களிப்புடன் 81 ஹெக்டேர் பரப்பளவில் மாம்பழ பயிர்செய்கை 2021 பெப்ரவரி 16 அன்று ஆரம்பிக்கப்பட்டது.<br>மாம்பழ் பயிர்ச்செய்கை செயற்திட்டம் 2022 யூன் இற்குள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த | கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் எதிர்பார்த்த காலக்கெடுவுக்குள் தம்புள்ள மாம்பழக் கொத்து நிறுவலை நிறைவுசெய்ய முடியவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், | விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான மாம்பழ மரச் செடிகளை இந்த செயற்திட்டம் 2023 மார்ச் 16 ஆம் திகதியே கொள்வனவு செய்திருந்தது. அதன் பிரகாரம், மாம்பழ பயிர்ச்செய்கை செயற்திட்டம் முன்மொழியப்பட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு செய்யப்படவில்லை. காட்டு யானைகளிடமிருந்து மாந் தோட்டங்களைப் பாதுகாப்பதற்கான யானை வேலியினை அமைப்பதற்காக ரூபா. 3,360,000 கிரயத்தில் மதிப்பீடொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் யானை வேலியானது நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம், சாலை வலையமைப்பினை மேம்படுத்துவதற்கு ரூபா. 36,480,000 , வடிகால் கால்வாய் இனை நிர்மாணம் செய்வதற்கு ரூபா. 3,191,440 , உரம் தயாரிக்கும் தளத்தினை நிர்மாணம் செய்வதற்கு ரூபா.8,383,186 , ட்ரோன் ஆய்வு மற்றும் மேப்பிங் செய்வதற்கு ரூபா.1,920,000 மற்றும் உரம் தயாரிக்கும் தளத்திற்கான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா.4,975,000 தொகையினை செலவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் , கூட்டு மொத்தமாக ரூபா.54,949,626 பெறுமதியுள்ள அந்த நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், விரும்பிய இலக்குகளை மாம்பழ பயிர்செய்கைக்கான செயற்திட்டம் அடைந்து கொள்ளவில்லை. | மாம்பழ நடவுகள் 2024 யூன் இற்குள் நிறைவடைந்துள்ளது. | |
| (உ) | மிளகாய் அதிகம் பயிரிடப்படும் வடமத்திய மாகாணம் போன்ற மலைப்பாங்கான பகுதிகளில் சமவெளி நிலத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதால், ஹெல்மலு முறையால் மிளகாய் மழைநீர் மற்றும் வெள்ளத்தால் அழிந்து பல இடங்களில் காணியின் அரை ஏக்கர் நிலத்தைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. மேலும், குழாய்களின் பயன்பாடு மற்றும் சொட்டுநீர் முறைமை முடக்கப்பட்டது. குருந்துவத்தை பிரதேசத்தில் மிளகாய் உலர்த்தும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த போதிலும், மிளகாய் சுமந்து செல்லும் விவசாயிகள் பண்ணையில் இருந்து 13- | பயனாளி விவசாயிகளின் சூழ்நிலைகள் மற்றும் மனப்பாங்குகள் காரணமாக இந்த செயற்திட்டம் வெற்றிபெறவில்லை. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டன. | செயற்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு முன்னர் சாத்திய ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 40 கிலோமீற்றர் தூரம் பயணித்து உலர்த்தும் இயந்திரத்தை சென்றடைய வேண்டியிருந்தமையினால் உலர்த்தும் இயந்திரத்தின் பாவனையும் தோல்வியடைந்திருந்தது. | | |
| (ஊ) | விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட விவசாய உபகரணங்களை பௌதீக மெய்மையாய்வு செய்த போது, 213 கல்வனைஸ்ட் (GI) குழாய்கள் மேலதிகமாக இருந்தது, பூச்சி நிருபிக்கப்பட்ட 177 றோல்கள் பற்றாக்குறை, 139 தண்ணீர் பம்புகள் பற்றாக்குறை, 07 அடி பெறுமதியில் பற்றாக்குறை மற்றும் 12,105 நாற்று கதிர்கள் பற்றாக்குறை மற்றும் 2.8 கிலோகிராம் மிளகாய் விதைகள் பற்றாக்குறை என்பன காணப்பட்டன என்று அவதானிக்கப்பட்டது. மணிகள் மற்றும் சுருள்களின் பெறுதல்கள் மற்றும் வழங்கல்கள் பதிவு செய்யப்படவில்லை. எனவே, குறைபாடுகள் மற்றும் மிகைகளை இனங்காண முடியவில்லை. | உள்ளக கணக்காய்வாளரின் கண்டுபிடிப்புகளின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட இருப்புக்கள் மற்றும் சரக்கிருப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 751 பின்பற்றப்படல் வேண்டும். |
| (எ) | பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட்ட 20 பயிர்செய்கை நிலங்களில் ஒரு நிலத்தைத் தவிர மீதமுள்ள 19 பயிர்செய்கை நிலங்களிலும் உள்ள விவசாயிகள் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தியிருக்கவில்லை. வெள்ளம், மழை அல்லது குளிர் காரணமாக அந்த 19 பயிர்செய்கை நிலங்களும் செயலிழந்துள்ளன. | பயனாளி விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயன்படுத்தப்படாத உள்ளீட்டு பொருட்களை மீள பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஏ) | ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் அமுல்ப்படுத்தப்பட்ட பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேசத்தில் கலப்பின சோள விதை உற்பத்தி செயற்திட்டம் ரூபா 90 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தொடங்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக 50 விவசாயிகளும், விவசாயிகளுக்குச் சொந்தமான 50 ஏக்கர் நெற்பயிர்களும் கையேற்கப்பட்டன. செயற்திட்ட அளவுகோல்களின் பிரகாரம் விவசாயிகளைத் தெரிவு செய்யாதமை, சரியான பயிரிடல் நிலத்தைத் தெரிவு செய்யாதமை, பயிரிடல் நிலத்திற்கு ஏற்ற விதைகளை அடையாளம் காணாதமை, விதைகள், உரங்கள் | இந்தப் பயிர் குளிர்கால பயிர்செய்கைக்கு மாற்றப்பட்டது, 14 விவசாயிகள் செயற்திட்டத்திலிருந்து வெளியேறினர். 36 விவசாயிகள் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். | விரும்பிய இலக்குகளை அடைந்து கொளவதற்கு நிதியினை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் விவசாய இரசாயனங்கள் உரிய காலத்திற்குள் வழங்கப்படாததால் செயற்திட்டம் முற்றிலும் தோல்வியடைந்திருந்தது. செலவிடப்பட்ட ரூபா 2.67 மில்லியன் தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | | |
| (ஐ) | ரூபா 32 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தையும் 100 பயனாளிகளையும் கொண்ட முருங்கை செயற்திட்டத்திற்கு ரூபா 28.4 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், முருங்கை விதைகளாக உள்ளூர் வளமூலங்களை பயன்படுத்தாமல் வெளிநாட்டு விதை வளமூலங்களைப் பயன்படுத்தியதால் முருங்கை பயிர்ச்செய்கை வெற்றியடையவில்லை. அதன் பிரகாரம் ஏற்பட்ட ரூபா 28.4 மில்லியன் செலவினம் பயனற்றதாகியிருந்தது. | செல்லப்பிராணிகளால் இந்திய வகையானது கடுமையாகத் தாக்கப்பட்டது. அதன் பிரகாரம் விவசாயிகள் உள்ளூர் வகைகளுக்கு மாறிவிட்டனர். 100 விவசாயிகளில் கிட்டத்தட்ட 50 சதவீதமானோர் வெற்றிகரமாக பயிர்செய்கை செய்து வருகின்றனர் மற்றும் ஏனையோரும் பயிர்செய்கையினை ஆரம்பித்துள்ளனர். | விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஒ) | ரூபா 23 மில்லியன் பெறுமதியான 23 இலத்திரனியல் தராசுகளின் பெறுகையின் போது முறையான மதிப்பீடு மற்றும் விவரக்குறிப்புகக்ள் தயாரிக்கப்படாததுடன் பெறுகை வழிகாட்டல்களின் 2.14 ஆம் பிரிவின் பிரகாரம் கூறுவிலைகள் கோரப்படவில்லை. மேலும், கேள்விப் பிணைகள் மற்றும் உத்தரவாதக் காலம் தொடர்பாக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தத் தவறியமை மற்றும் உள்ளூர் முகவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படாததன் காரணமாக உள்ளூர் முகவரின் விலையை விட அதிகமாக ரூபா 247,667 செலுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | முகாமையினால் எவ்வித கருத்துகளும் தெரிவிக்கப்படவில்லை. | அரச பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

### 3.6 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஐந்து மாதங்களுக்குப் பின்னர், 2021 மே இல் ரூபா.7,084,550 பெறுமதியுள்ள முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டது. சிறந்த நடைமுறையின் பிரகாரம், ஒரு செயற்திட்டத்தின் அனைத்து முறைமை மற்றும் தகவல்கள் என்பன செயற்திட்டக் காலப்பகுதியின் முடிவில் அமைச்சிடம் கையளிக்கப்படல் வேண்டும். இந்த செயற்திட்டம் 2024 திசெம்பர் 31 அன்று நிறைவடையும் என்ற போதிலும் கணக்காய்வுக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், 2024 செப்தெம்பர் 12 இல் உள்ளவாறு முறைமை மற்றும் தகவல்களை அமைச்சிடம் கையளிப்பது குறித்து செயற்திட்டத்திடம் முறையான திட்டமொன்று காணப்படவில்லை. | சலுகைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் கண்காணிப்பு தகவல் முறைமை (MIS) தொடர்புடைய மூலக் குறியீடுகள் மற்றும் செயல்பாட்டு கையேடுகளுடன் விவசாய திணைக்களத்தின் தேசிய வேளாணமை தகவல் மற்றும் தொடர்பு மையத்திடம் (NIACC) கையளிப்பு செய்வதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் சொத்துக்களை செயற்திட்ட முடிவில் வரிசை அமைச்சிடம் கையளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |